

எல்.கே. ராஜ்

**கோலாலம்பூர், அக். 23-** பிரிக்பீல்ட்ஸ் தீபாவளி கலை நிகழ்ச்சி குறித்து அதன் ஏற்பாட்டாளர் தரப்பு, தீபாவளிச் சந்தை வியாபாரிகள் இடையே நேற்று வாக்குவாதம் ஏற்பட்டது.





# கலை விழாவை நடத்துவோம்

- ஏற்பாட்டுக் குழு

# நடத்தக்கூடாது

- வியாபாரிகள்

பக்கம் 13

## பிரிக்பீல்ட்சில் தொடரும் சர்ச்சை

முதல் பக்கத் தொடர்ச்சி

### கலை விழாவை ...

முன்னதாக பிரிக்பீல்ட்சில் தீபாவளிக் கடைகள் அமைக்கப்பட்ட நிலையில் அந்தப் பகுதியில் கலை நிகழ்ச்சி நடத்துவதற்காக மேடையை அமைப்பதற்காக அங்கிருந்த சில கடைகள் கடந்த வெள்ளிக்கிழமை அகற்றப்பட்டன. இது பெரும் சலசலப்பை ஏற்படுத்தியது.

நேற்று முன்தினம் இந்த விவகாரம் தொடர்பில் வியாபாரிகள் பிரதமர்துறை அமைச்சர் (கூட்டரசுப் பிரதேசம்) டாக்டர் ஸலிஹா முஸ்தாபா, டத்தோ பண்டார் டத்தோஸ்ரீ மைமுனா ஆகியோரிடம் மகஜர் சமர்ப்பிக்க கோலாலம்பூர் மாநகர் மன்ற அலுவலகத்தில் அமைதி மறியல் நடத்தி இருந்தனர்.

இந்நிலையில் தயாளன் ஸ்ரீபாலன் தலைமையில் நேற்று இந்தக் கலை நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் செய்தியாளர் சந்திப்புக் கூட்டம் நடத்தினர். அவர்கள் பேசுகையில், இந்தக் கலை நிகழ்ச்சியால் யாருக்கும் எந்தப் பாதிப்பும் வராது. அதேசமயம் எந்தவோர் இடையூறும் ஏற்படாது.

இந்தக் கலை நிகழ்ச்சியில் ஆயிரக்கணக்கானோருக்கு உணவுகள் வழங்கப்படவுள்ளன. அன்பு இல்லங்களைச் சேர்ந்த சிறார்களுக்கும் உதவிகள் வழங்கப்படவுள்ளன. எனவே இந்தக் கலை நிகழ்ச்சி திட்டமிட்டபடி நடத்தப்படும் எனக் கூறினார்.

மேலும் இந்தக் கலை நிகழ்ச்சிக்கும் பத்து நாடாளுமன்ற உறுப்பினர் பி. பிரபாகரனுக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை என தயாளன் ஸ்ரீபாலன் குறிப்பிட்டார்,



இந்நிலையில் அங்கு திரண்டிருந்த வியாபாரிகள் இந்தக் கலை விழாவுக்கு கடுமையான எதிர்ப்புத் தெரிவித்தனர். நாங்கள் இதுபோன்ற தீபாவளிப் பண்டிகை சமயத்தில்தான் வருமானம் ஈட்டுகின்றோம். அதற்குத் தடையாக இந்தக் கலை நிகழ்ச்சியை இங்குதான் நடத்த வேண்டுமா? நாங்கள் இந்தக் கலைநிகழ்ச்சியை எதிர்க்கவில்லை. ஆனால் ஏன் ஏற்கெனவே கடைகள் அமைத்து வியாபாரம் செய்து வரும் இந்தக் குறிப்பிட்ட இடத்தில்தான் நடத்துகிறீர்கள் என்று கேள்வி எழுப்புகிறோம் என்று அவர்கள் கூறினர்.

இதனிடையே இரு தரப்பினருக்கும் இடையே வாக்குவாதம் முற்றியது. மேலும் இருதரப்பினருக்கும் இடையே ஒருமித்த தீர்வு காணப்படவில்லை.